ஸ்ரீ தந்வந்த்ரயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை.

ஸாதாரண
ஆவணி

SEPTEMBER
1970



தொகுதி 32
பகுதி 9

Vol. 32
No. 9

ஆசிரியர் :
வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S ராம சர்மா,

பிரசுரகர்த்தா :
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscription
Rs. 5/-

| | | |
|---|---|---|
| நாட்டு வைத்திய கவுன்சில் | ... | 179 |
| செய்திகள் | ... | 181 |
| ஸஹஸ்ரயோகம் | ... | 183 |

காரியாலயம்: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

GRAM : KALIA

Phone: Off. 3232, Res. 4343

# KALIA BROTHERS (Regd.)

INDIAN DRUGS MERCHANTS

JULLUNDUR CITY. (INDIA)

| Price List | | Rs. ps. |
|---|---|---|
| Pure Musk per gram | | 50-00 |
| Pure Saffron | | 2-00 |
| Pure Gorochanam per gram | | 9 00 |
| Pure Pearls Spl. | ,, | 10-00 |
| ,, No. 2 | ,, | 7-00 |
| ,, No. 3 | ,, | 4-00 |
| Pure Ambar No. 1 | ,, | 3-50 |
| ,, No. 2 | ,, | 2-50 |
| ,, No. 3 | ,, | 2-00 |
| Pure Silver Leaves | ,, | 0-80 |

PACHAKARPURAM

| | | |
|---|---|---|
| Spl. Bhimseni per gram | | 0-30 |
| Singapuri (Yellow) | ,, | 0-25 |
| German or Japan | ,, | 0-20 |
| Powder Pachakarpuram | | 0-06 |
| Pure Menthol | ,, | 0-45 |
| Pure Thymol | ,, | 0-20 |
| Ashtavargam | per Kilo | 7-50 |
| Jiwak Rishwak | ,, | 2-50 |
| Meda Mahameda | ,, | 8-00 |
| Kakoli Kshir Kakoli | ,, | 8-00 |
| Ridhi Vridhi | | 12-00 |
| Silajit (Kalmodam) | | |
| Suryatapi Silajit No. 1 | ,, | 100-00 |
| No. 2 | ,, | 85-00 |

CRUDE DRUGS

| | | |
|---|---|---|
| Attis Bitter | ,, | 100-00 |
| Beedana | ,, | 20-00 |
| Guggulu Shudh | ,, | 12-00 |
| Gowela | ,, | 60-00 |

| Price List | | Rs. Ps. |
|---|---|---|
| Kuth No. 1 | per Kilo | 5-00 |
| Moosli White | ,, | 15-00 |
| Pushkar mool | ,, | 5-00 |
| Rose Flower Dry | ,, | 10-00 |
| Som Lata | ,, | 10-00 |
| Salib Panja | ,, | 85-00 |
| Salib Gatha | ,, | 20-00 |
| Shingraf | ,, | 300-00 |
| Tiger's Fat | ,, | 45-00 |
| Bears Fat | ,, | 40-00 |
| Pure Vanslochan | ,, | 80-00 |

AYURVEDIC MEDICINE

| | | |
|---|---|---|
| Chander Prabha | per Kilo | 70-00 |
| Chavan prash | ,, | 10-00 |
| Gudoochi Sattoo (Sindi Maw) | ,, | 12-00 |
| Ras Sindur | ,, | 300-00 |
| Shudh parad | ,, | 300-00 |
| Swaran Vang | ,, | 200-00 |
| Yogaraj Guggulu | ,, | 30-00 |
| Kaishore ,, | ,, | 30-00 |
| Maha Yogaraj ,, | ,, | 140-00 |
| Abrak Bhasam | ,, | 200-00 |
| KantLoh Bhasam | ,, | 85-00 |
| Loh Bhasam Special | ,, | 150-00 |
| Shring Bhasam | ,, | 35-00 |
| Sankh Bhasam | ,, | 30-00 |
| Mandur Bhasam | ,, | 35-00 |
| Silajit Bhasam | ,, | 35-00 |
| Silver Bhasam | ,, | 700-00 |
| Swaran Makshik | ,, | 80-00 |
| Sulphur Purified | ,, | 50-00 |
| Tamber Bhasam | ,, | 300-00 |
| Sidh Makar Dhwaj | per gram | 4-20 |
| Makar Dhwaj ordinary | | 0-80 |

Please ask for detailed Price List 6½% Commission to the readers of Vaidya Chandrika

தந்தி: "அம்ருதம்"   P. B. No. 1382.   போன்: 26006

# தி ஆர்ய வைத்திய பார்மஸி

## (கோயமுத்தூர்) லிமிடெட்.,

**தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18**

**உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்.**

எங்களுடைய கிளைகள்:

| | | |
|---|---|---|
| 1. | 23 B, பூஸா ரோடு, புது டில்லி : | போன் ; 585687 |
| 2. | மொயிதீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1 | ,, 2984 |
| 3. | கௌடியா மடத்தெரு, மதராஸ்-14 | ,, 85752 |
| 4. | வளிஞ்ஞம்பலம், எர்ணாகுளம், கொச்சின்-18 | ,, 32988 |
| 5. | பிள்ளையார் கோயில்ரோடு, கண்ணனூர்-1 | ,, 92 |
| 6. | மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1 | ,, 195 |
| 7. | கடைவீதி, பொன்னானி | ,, 41 |
| 8. | ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1 | ,, 378 |
| 9. | கோர்ட் ரோடு, ஆலத்தூர் | ,, 87 |
| 10 | மெயின் ரோடு, கஞ்சிக்கோடு | |
| 11. | ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18 | ,, 33758 |
| 12 | இந்திரா பில்டிங் கள்ளிக்கோட்டை-2 | ,, 4891 |
| 13. | 229, ராஜவீதி, கோயமுத்தூர்-1 | ,, 33988 |
| 14. | T. T. 384 K. டெலிச்சேரி ரோடு கண்ணனூர்-2 | |
| 15 | No. 263, 64 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி) | |

| பாக்டரி: | நர்ஸிங்ஹோம்: |
|---|---|
| கஞ்சிக்கோடு (கேரளா) | திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18. |
| (போன்: 2) | (போன்: 22194) |

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

**ஆர்ய வைத்தியன் P. V. ராமவாரியர்**
**பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.**

## வாரியர்

# க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப் படுத்தும் :

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும் விருதாப்பியத்தினால் ஏற் படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00; 12 ML. ரூ 3-75

**ஆரிய வைத்தியர் கே. எஸ். வாரியர் அவர்களின்**

## அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

**சைனாபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.**

**PHONE : 5441** **வீடு போன் : 6074**

**[1936-ல் நிறுவப்பட்டது.]**

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

உயர்ந்த கஸ்தூரி, குங்குமப்பூ,
பச்சைகற்பூரம் முதலியவைகளுக்கு
மிகவும் சிறந்த இடம்.

Wholesale Dealers in:
Musk Saffron and Ayurvedic Drugs etc.

CORRESPOND IN HINDI OR ENGLISH

Shri Markanday Musk Depot

(Regd.)

Importers and Exporters

Civil Lines, LUDHIANA, PUNJAB.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

# BHANOT BROTHERS

(REGD.)

**Wholesale Musk, Saffron and Indian Drugs Merchants,**

## LUDHIANA - PUNJAB

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

# *K. L. TALWAR & BROS.,*

MUSK MERCHANTS,

**P. B. No. 17, LUDHIANA.**

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.




# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 32 | சாதாரண ஆவணி | பகுதி 9 |
| Vol. 32 | 1970 செப்டம்பர் | No. 9 |


நமச் சிவகுமாராய.

॥ श्री धन्वन्तरये नमः ॥

उदेतु हृदयाकाशे गुरुवर्यकलानिधिः ।
यदीयचन्द्रिका वैद्यसंशयध्वान्तनाशिनी ॥

## நாட்டு வைத்திய கவுன்சில்

நவீன வைத்தியத்துக்கு இருப்பதுபோல நாட்டு வைத்தியத்துக்கும் ஒரு தனிக் கவுன்சிலை நியமிப்பதற்கான மசோதா ராஜ்ய சபையில் நிறைவேறியுள்ளது. சித்த வைத்தியம், ஆயுர்வேதம் யூனானி ஆகிய மூன்று முறைகளுக்குமாகச் சேர்ந்தது இந்தக் கவுன்சில். இவை வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டாலும் இவற்றின் அடிப்படைகள் ஏறக்குறைய ஒரே மாதிரியானவைதாம். சில ஆண்டுகளுக்கு முன் வரை இந்த மூன்றுமே ஒரே காலேஜில் திறம்பட போதிக்கப்பட்டு வந்த நிலைமை இருந்து வந்தது நினைவு இருக்கலாம். எனவே இவை மூன்றுக்குமாக ஒரே கவுன்சில் இருப்பதில் பிசகு ஒன்றுமில்லை. ஆனால் மூன்றிலும் தரமான பாட போதனை, பயிற்சி, தொழில் வசதி ஆகியவை தேசத்தில் பரவலாகக் கிடைப்பதற்கு வழி செய்வது அவசியம்.

ஹோமியோபதிக்கும் இதே கவுன்சிலில் இடம் தரலாமென்று கருதப்பட்டது. ஆனால் அது நவீன வைத்தியத்தின் மாற்று அம்சமாகையால் அதற்குத் தனிக் கவுன்சில் அமைவதுதான்

முறை என்று இரு சபையினர் கொண்ட தனிக் கமிட்டி சிபாரிசு செய்துள்ளது. அதற்கு தனி கவுன்சில் ஏற்படுவதுதான் நியாயம்.

மூன்று நாட்டு வைத்திய முறைகளும் ஹோமியோபதியும் பரவலாக புழக்கத்தில் இருந்து வருவதால் அவற்றின் படிப்பு, பயிற்சி, தொழில் முறை ஆகியவற்றின் தரத்தை நிர்ணயித்து ஒழுங்கு முறை இருக்கச் செய்வது அவசியம். அதுதான் கவுன்சிலே அமைப்பதன் நோக்கம். ஏற்கனவே பல மாநிலங்களில் நாட்டு வைத்தியர்கள் தம்மை முறைப்படி பதிவு செய்துகொண்டு தொழில் நடத்துகிறுர்கள். நாட்டு வைத்தியம், நவீன வைத்தியம் ஆகிய இரண்டையுமே ஒருசேரப் பயின்ற " இணைப்பு வைத்திய " முறை நடுவில் பல ஆண்டுகள் போதிக்கப்பட்டு வந்தது. அதில் பட்டம் பெற்ருேர் சுமார் ஐம்பதாயிரம் பேர் இருப்பதாக லோக சபையில் ஒரு மெம்பர் கூறினுர். அவர்களுக்கு புதுத்திட்டத்தில் முழு பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தப்பட்ட திருத்தங்களை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது

" இணைப்பு வைத்திய " போதனை இப்பொழுது நடைபெறுவ தில்லை. மூன்று நாட்டு வைத்திய முறைகளுக்கும் தனித் தனியாக போதனைக்கல்லூரிகள் ஆங்காங்கு இருக்கின்றன. இவை ஒழுங்காக, சரிவர நடைபெறச் செய்வதற்கு யூனியன் சர்க்கார் விசேஷ அக்கரை எடுத்துக்கொள்வது அவசியம். கேரளத்திலும் தமிழ் நாட்டிலும் ஏற்கனவே உள்ள ஆயுர்வேத காலேஜுகளைப் பலப்படுத்தி, முதல் தரமாக்க வேண்டிய அவசியமுண்டு. நாட்டு வைத்தியம் தேசத்தில் இன்னும் பரவலாகப் புழக்கத்தில் இருந்து வருகின்றது. அதில் சிறந்த மருந்துகள் இருக்கின்றன. அவை கூடியவரை மலிவு என்று சொல்லவேண்டும். எனவே மக்களுக்கு அவை நம்பகமான வகையில் கிடைக்கச் செய்வது அவசியம்.

புதிதாக ஏற்படுகின்ற கவுன்சிலில் மேலும் சில முக்கியமான விஷயங்களிலும் கவனம் செலுத்துவது அவசியம். நாட்டு வைத்திய மாணவர்கள், நவீன வைத்தியத்தின் பரிசோதனை முறைகளில் போதிய பயிற்சி பெறுவது விசேஷப் பயனுள்ளதாக இருக்குமென்று தோன்றுகிறது. இது எவ்வாறு கைகூடச் செய்யலாம் என்பது ஆராய்ச்சிக்குரியது. நாட்டு வைத்திய ஆராய்ச்சிக்கு விசேஷ ஏற்பாடுகள் தேவை கைதேர்ந்த இந்திய மருந்துகளின் உள்ளடக்கத்தை நவீன வைத்திய பரிபாஷையில் வெளியிடச் செய்வதும் அவசியம் எனத் தோன்றுகிறது. இம் மாதிரி எல்லா வகைகளிலும் பாடுபட்டால் நவீன வைத்தியத் துக்கு குறைவில்லாத தகுதிகள் நாட்டு வைத்தியத்துக்கும் அமையலாம்.

---

<u>செய்திகள்</u>

## தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலம்
## மதுரை கிளை

சென்ற 30—8—1970 அன்று நடந்த மதுரைக்கிளை மாதாந்தரக் கூட்டத்தில் வைத்யஸ்ரீ S. வேலாயுதம் அவர்கள் தலைமையில் வைத்யஸ்ரீ G. ரவீந்திரன் அவர்கள் ரக்தபித்த நோய் பற்றிய சர்ச்சையைத் துவக்கி வைத்தார்கள். ஸ்ரீ P. V. ராகவவாரியர், ஸ்ரீ C. K. ஸ்ரீதர், ஸ்ரீ ஸ்ரீனிவாஸ அய்யர் முதலானோர் சர்ச்சையில் பங்கு கொண்டனர்.

## தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலம்
## நிர்வாக ஸமிதிக் கூட்டம்

நமது மகா மண்டலத்தின் நிர்வாக ஸமிதிக் கூட்டம் 30—8—70 ஞாயிறு பிற்பகல் 2-மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட் (31-A, சின்னக்கடைத்தெரு, திருச்சி) கட்டடத்தில் நடைபெற்றது. மகாமண்டலத் தலைவர் ஸ்ரீ T. S. ஈச்வரன் அவர்கள் தலைமை வகித்தார். ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரீ, திருச்சி, ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி, ஸ்ரீ A. ராகவராவ், ஸ்ரீ N. C. S. ராகவன், ஸ்ரீரங்கம் ஆகியோர் கூட்டத்திற்கு வந்திருந்தனர். கோவை ஸ்ரீ P. V. ராமவாரியர் தஞ்சை ஸ்ரீ V. S. வெங்கடஸுப்ரமண்ய சாஸ்திரீ ஆகியோரிடமிருந்து வந்த கடிதங்கள் கூட்டத்தில் வாசிக்கப்பெற்றன.

கூட்டத்தில் தீர்மானிக்கப்பெற்ற விவரம் வருமாறு:

1. பாடியாலாவில், நவம்பர் மாதத்தில் நடைபெற விருக்கும் 46-வது அகில இந்திய ஆயுர்வேத மஹா நாட்டின் தலைவர் பதவிக்கு அடியிற்கண்ட ஐவரை சிபாரிசு செய்வதாகத் தீர்மானிக்கப்பெற்றது.

1. ஸ்ரீ P S. ராமசர்மா, கரூர்
2. ,, V. B. நடராஜ சாஸ்திரீ, திருச்சி.
3. ,, துர்கா பிரஸாத் சர்மா பாட்னு.
4. ,, ராம்நாராயண் சர்மா, ஜான்ஸி
5. ,, அனந்ததிரிபாடி சர்மா, பர்ஹாம்பூர்.

2. 46-வது அகில இந்திய ஆயுர்வேத வித்யாபீடத்தின் தலைவர் பதவிக்கு அடியிற்கண்ட ஐவரை சிபாரிசு செய்வதெனத் தீர்மானிக்கப்பெற்றது.

1. ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரீ, திருச்சி
2. ,, பாபுராம் மிச்ரா, ஹாபூத்
3. ,, ஹரிதத்த சாஸ்திரீ, டில்லி
4. ,, P. S. ராமசர்மா, கரூர்
5. ,, A. ராகவராவ், திருச்சி

சேலம் ஜில்லா தாராபுரத்திலிருக்கும் வைத்ய விசாரத, ஆயுர்வேத சிரோமணி ஸ்ரீ S. திருவேங்கடம் அவர்களை தமது மகாமண்டலத்தின் ஆயுள் மெம்பராகச் சேர்த்துக்கொள்ளப் பெற்றது.

---

## பாடியாலாவில் அகில இந்திய ஆயுர்வேத மகாநாடு

1970 நவம்பர் 9–10 தேதிகளில் பாடியாலாவில் 46-வது அகில இந்திய ஆயுர்வேத மகா ஸம்மேளனம் நடைபெற விருக்கிறது. இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி மகாநாட்டை ஆரம்பித்து வைக்கிறார்கள். மத்திய சுகாதார மந்திரி திரு K. K. ஷா அவர்களும் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். அத்துடன் நடைபெறவிருக்கும் கண்காட்சியை விளம்பரம் செய்தி இலாகா மந்திரி திரு இந்திரகுமார் குஜரால் தொடங்குகிறார். பாடியாலா அரசினர் ஆயுர்வேதக் கல்லூரித் தலைவர் ஸ்ரீ கீர்த்தி சர்மா இம்மகாநாட்டை நடத்துகிறார் அதிக விபரம் அறிய விரும்புபவர் Pandit Keerti Sharma, M A., Sastri, Ayurvedacharya, D. Sc. A, Principal Government Ayurvedic, College, Prasad Bhavan, Patiala. என்ற விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

# ஸஹஸ்ரயோகம்

## நேத்திரரோக சிகித்சை

992. திராக்ஷாதி — திராக்ஷை, சந்தனம், மஞ்சிஷ்டி, காகோலி, க்ஷீரகாகோலி, ஜீவகம், ஜீனி, சதாவரி, மேதா, இரும்பு, அதிமதுரம், செங்கழுநீர்கிழங்கு, இவை வகைக்கு கிராம் 10 அரைத்துக்குழப்பி பழைய நெய் 2 லிட்டர், பால் லிட்டர் 2 சேர்த்து வடித்து உபயோகிக்க காரம், திமிரம், முதலி யன தீரும்.

993. திரிபலே கிருதம்—400 கிராம் திரிபலேயை 8 லிட்டர் ஜலத்தில் கஷாயம் வைத்து நாலில் ஒன்ருகச் சுண்டின பிறகு சமன்பால் சேர்த்து 50 கிராம் திரிபலே கல்கம் சேர்த்து, ஒரு லிட்டர் நெய் சேர்த்து வடித்து ஜீனி, தேன் கலந்து சாப்பிடவும். திரிபலே கஷாயம் கலந்தும் சாப்பிடலாம். திமிரம் தீரும்.

994. யஷ்டீ மதுகாதி—அதிமதுரம், காகோலி, க்ஷீரகாகோலி சிறுவழுதிணேவேர், திப்பிலி, சீந்திற்கொடி, செங்கழுநீர்கிழங்கு, ஜீனி, திராக்ஷை, இவை கல்கம்செய்து நெய், ஆட்டுப்பால், திரி பலேகஷாயம், ஆடாதோடைரஸம், கருசலாங்கண்ணிரஸம், இவை தனித்தனியாகக் கூட்டி காய்ச்சின நெய் சாப்பிட கண் வியாதிகள் எல்லாம் தீரும் இதற்கு மஹாதிரைபலம் எனப் பெயர்.

995. நிமிளே, இரும்பு, தங்கம், அதிமதுரம், ஜீனி, பழைய நெய், தேன், இவற்றில் ஏதாவது சேர்த்துத் திரிபலேயைச் சாப் பிட திமிரம் தீரும்.

996 துத்தத்தை இலந்தைத்தணலில் ஏழுதரம் காய்ச்சி ஆட்டுப்பால், நெய், தேன் இவைகளில் தோய்த்து நிமிளே, ரஸாஞ்சனம், கடுகுரோகணி தகரவிதை, இந்துப்பு, லோத்திரப் பட்டை மனேசிலே கடுக்காய், திப்பிலி, ஏலரிசி, அஞ்சனக்கல், கடல்நுரை, அதிமதுரம், இவை எல்லாம் மூசையில் போட்டு ஊதி எடுத்து பொடித்து கண்ணில் போட காசம், அர்மம், மாலேக் கண், ஸிரோத்பாதம், இவை தீரும். திமிரத்திற்கு மிகவும் நல்லது

997. கருவங்கத்தை இரும்புக்கரண்டியில் உருக்கி திரிபலை கஷாயத்திலும், கரிப்பான் ரஸத்திலும், நாவிக்கிழங்கைப் பொடி செய்து கலந்த நெய்யிலும், வெள்ளாட்டின் பாலிலும், அதிமதுரக் கஷாயத்திலும் முறையே தனித்தனியாக ஏழுதடவை சாய்த்து அதைச்சலாகைசெய்து அஞ்சனக்கல்லுடன் சேர்த்தும், அல்லது தனித்தும் உபயோகிக்க திமிரம், அர்ம, அரிப்பு, சிகப்புக்கோடு, முதலியவை சமிக்கும்.

998 ரஸாதி—ரஸம், கருவங்கம், இவை வகைக்கு 12 கிராம் அஞ்சனக்கல் 24 கிராம் இவைகளைப் பொடிசெய்து சுவல்பம் பச்சைக்கர்ப்பூரம் சேர்த்துக் கண்ணிலிட திமிரம் நீங்கும்.

999. உச்சிசூரியன்போலப் பிரகாசமுள்ள கன்னங்களுடன் கூடியும் காலத்தில் மரணமடைந்துமுள்ள கழுகின் முகத்தை மாத்திரம் எடுத்துப் பசு சாணத்தால் புடமிட்டு பஸ்மம்செய்து அந்த பஸ்மத்திற்குச் சமஎடை அஞ்சனக்கல்லை (ஸ்ரோதோஞ் ஜனத்தை)ப் பொடித்துச் சேர்த்துச் சமஎடை பசுநெய்யால் கல்வத்திலிட்டு அரைத்துக் கண்களிலிட கண்களுக்குக் கழுகின் கண்போல மிகுந்த பலம் உண்டாகும்

1000 கிருஷ்ணசர்பத்தின் தலையை எடுத்து அதில் அஞ்சனக் கல்லையும் நெய்யையும் போட்டு ஒட்டிவிட்டு புகைவெளி வராம லிருக்கும்படி சீலைமண் செய்து புடமிட்டுப் பொடிசெய்து விலா மிச்சம்வேர், பச்சிலை, இவைகளைச் சமஎடை சேர்த்துக் கண்ணிலிட விழிகள் வெடித்திருந்தபோதிலும் குணமாகும்.

1001. 16 லிட்டர் பசும்பாலில் இறந்த ஒரு கிருஷ்ண சர்ப் பத்தையும் நான்கு தேள்களையும் போட்டு 21 நாள் வைத்திருந்து பிறகு அதைக் கடைந்து வெண்ணய் எடுத்து ஒரு கோழிக்கு அதைமாத்திரம் உணவாகக்கொடுத்து அக்கோழியின் மலத்தை எடுத்து கண்ணில் இட குருடனுக்கும் பார்வையுண்டாகும்.

1002. கிருஷ்ண ஸர்ப்பத்தின் வஸை (மாமிசத்தைத் தணலில் வதக்கி எடுக்கும் எண்ணைக்கு வஸா எனப்பெயர்) சங்கு, தேத்தான்விதை, அஞ்சனக்கல் (ஸௌவீராஞ்சனம்) இவைகளின் ரஸக்ரியை கண்களுக்கு உறுதியையளிக்கும்

1003. அப்பிரதிஸாரம் திப்பிலி 10, ஸுவர்ணமாக்ஷிகம் 6 கிராம் துத்தம் 50 கிராம் அதிமதுரம் 12 கிராம் இவைகளைப் பசும்பாலில் நனைத்துப் பிறகு எரித்துப்பொடியாக்கிக் கண்களிலிட திமிரம் நீங்கும்.

1004. அக்ஷாதி—தான்றிக்காய்விதை, மிளகு, நெல்லித் தோல், துத்தம், அதிமதுரம், இவைகளைச் சமஎடையாக எடுத்துத் தண்ணீர் விட்டரைத்து மாத்திரையுருட்டி நிழலில் உலர்த்திக் கண்களிலிட திமிரங்கள் நீங்கும்.

1005. ஷண்மாக்ஷிக யோகம்—மிளகு 12 கிராம் நெல்லி வற்றல் 24 கிராம், சங்கு 36 கிராம் (கடல்நுரை 24 கிராம் என்று சிலர்) துத்தம் 48 கிராம் அஞ்சனக்கல் 60 கிராம் சுவர்ணமாக்ஷிகம் 72 கிராம் இவைகளைப் பொடிசெய்து கண்களிலிட திமிரம், அர்ம, முதலியன தீரும்.

1006. விமலகுளிகை—அதிமதுரம், மிளகு, திப்பிலி, லோத் திப்பட்டை, தேவதாரு, மஞ்சள், திரிபலை இவை சமமாக எடுத்து குளிர்ந்த ஜலத்தால் அரைத்து மாத்திரையுருட்டி நிழலில் உலர்த்தி கண்களிலிட திமிரம், காசம், முதலியன தீரும்.

1007. சூர்ணாஞ்சனம் — வைரம் முதலிய ரத்னங்கள், (கிடைத்தமட்டில் ரத்னங்களை எடுத்துக்கொள்ளவும்) வெள்ளி, ஸ்படிகம், சுவர்ணம், ஸ்ரோதோஞ்சனம், தாமிரம், அரப்பொடி, சங்கு, சந்தனம் (பீதசந்தனம் என்ற வகையை எடுத்துக் கொள்ளவும்) காவிக்கல், (குங்குமப்பூவையும் சிலர் இதில் அதிகப் படியாகச் சேர்க்கின்றனர்) இவைகளைச் சமமாக எடுத்து நன்ருகப் பொடிசெய்து கண்களிலிட எல்லா கண்நோய்களும் நீங்கும்.

1008. திலதைலாதி-எள்ளெண்ணெ, தான்றி எண்ணெ, கரிப் பான் ரஸம், வேங்கைப்பட்டைக் கஷாயம், இவைகளைச் சமமாக எடுத்து இரும்பு பாத்திரத்தில் காய்ச்சி வடித்து அத்தைலத்தால் நஸ்யம் செய்ய கண்களுக்கு பலம் கொடுக்கும்.

1009. ஜீவந்தியாதி தைலம்—அடபதியன்கிழங்கு 5 கிலோ இடித்துப்பானையில் போட்டு 32 லிட்டர் விட்டு எட்டில் ஒன்ருக வற்றவைத்துக் கஷாயம்செய்து வடிகட்டி அதில் நல்லெண்ணெ 2 லிட்டர் பசும்பால் 2 லிட்டர் விட்டு அதில் குருந்தொட்டி, நாகபலா, அடபதியன்கிழங்கு சதாவரி, இவை வகைக்குத் 50 கிராம் அதிமதுரம் 200 கிராம் இவைகளைப்பொடிசெய்து போட்டு இரும்பு பாத்திரத்தில் பதமாகக்காய்ச்சி வடித்து அத்தைலத்தை இரும்புபாத்திரத்திலேயே ஒருமாதம் வைத்திருந்து பிறகு நஸ்யம் செய்ய கண்நோய்கள் தீரும்.

1010. ஸிதைரண்டாதி—வெள்ளை ஆமணக்குவேர், சடா மாஞ்சி, கண்டங்கத்திரிப்பழம், தேவதாரு, வசம்பு, தகரை,

கோஷா பில்வவேர், இவை வகைக்கு 12 கிராம் இடித்துப் பொடிசெய்து நல்லெண்ணை 1 லிட்டர் பசும்பால் 1 லிட்டர், ஜலம் 4 லிட்டர். சேர்த்துத் தைலபதமாகக் காய்ச்சி வடித்து நஸ்யம் செய்ய கண் ரோகங்கள் அனைத்தும் தீரும்.

1011. சதாஹ்வாதிகிருதம் சதகுப்பை, கோஷ்டம், விலாமிச்சம்வேர், காகோலீ, க்ஷீரகாகோலீ, அதிமதுரம், தாமரைக் கிழங்கு, ஸரலம், திப்பிலி, தேவதாரு, வகைக்கு 18 கிராம் இடித்துப் பொடி செய்து அதில் நல்லெண்ணை 2 லிட்டர், பசும் பால் 16 லிட்டர் சேர்த்துப் பதமாகக் காய்ச்சி வடித்துக் கண்களில் தர்பணம்செய்ய கண் ரோகங்கள் தீரும்.

1012. கருப்புமான்கொம்பை எடுத்து அதையும் பசும்பாலையும் சம அளவாக எடுத்துச்சேர்த்துக் காய்ச்சி பிறகு கடைந்து வெண்ணை யெடுத்து அந்த வெண்ணை 2 லிட்டர் அதிமதுரம், விலாமிச்சம்வேர், சந்தனம், இவை வகைக்கு 62 கிராம் இடித்துப் பொடிசெய்து ஒன்றுசேர்த்துப் பதமாகக் காய்ச்சி வடித்து கண்களில் தர்பணம் செய்ய கண்ரோகங்கள் தீரும்

1013 ஹ்ரீபேராதிதைலம்—தசமூலகஷாயம் பசும்பால் நல்லெண்ணை, இவை வகைக்கு 2 லிட்டர் ஜலம் 4 லிட்டர் இவைகளைச்சேர்த்து அதில் விலாமிச்சம்வேர், தேவதாரு, மஞ்சள், மரமஞ்சள், திப்பிலி, இவை வகைக்கு 40 கிராம் இடித்துப் பொடி செய்து போட்டுப் பதமாகக் காய்ச்சி வடித்து நஸ்யம்செய்ய கண் நோய்கள் தீரும்.

1014. கிருஷ்ணாதி—திப்பிலி, அரப்பொடி, திரிகடு, இந்துப்பு, திரிபலை, அஞ்சனக்கல், இவைகளும் முயல், பசு, கழுதை, ஸிம்ஹம், ஒட்டகை ஆகிய இவைகளின் பற்களும் நெற்றி எலும்பும், நறுநீண்டிக் கிழங்கு, மிளகு, சங்கு, சந்தனம், கடல் நுரை, இவை சமமாக எடுத்துக் கல்வத்திலிட்டு முலைப்பால், ஆட்டுப்பால் இவைகளால் அரைத்து மாத்திரைசெய்து கண்களில் இட எல்லா நோய்களும் தீரும்

1015 திராக்ஷாதி—திராக்ஷைப்பழம், விலாமிச்சம் வேர், லோத்திப்பட்டை, அதிமதுரம், சங்கு, தாமிரம், சந்தனம், தாமரைக் கிழங்கு, பத்மகாஷ்டம், செங்கழுநீர்க்கிழங்கு, இவை சமமாக எடுத்து ஆட்டுப்பாலால் அரைத்து மாத்திரை செய்து கண்களில் போட ரக்ததிமிரம் சமிக்கும்.

1016. மதூகாதி தைலம்—இலுப்பைவைரம், வாய்விளங்கம், மிளகு, தேவதாரு, இவை வகைக்கு 50 கிராம் நல்லெண்ணெ, பசும்பால், வகைக்கு 1 லிட்டர் ஜலம் 3 லிட்டர் இவைகளைச் சேர்த்துப் பதமாகக் காய்ச்சி நஸ்யம் செய்ய கண்நோய்கள் தீரும்.

1017. மதூகாதிலேபம்—இலுப்பைவைரம், வாய்விளங்கம், மிளகு, தேவதாரு, இவைகளைச் சமமாக எடுத்து ஜலம் விட்டு அரைத்து முகத்தில் பத்துபோட கண்நோய்கள் தீரும்.

1018. நததிதைலம்—தகரம், செங்கழுநீர்க் கிழங்கு, நன்னாரி, அதிமதுரம், சண்டைக்கிழங்கு, இவைகளைச் சமஎடையாக எடுத்துக் கஷாயம்செய்து அதற்குச்சமம் நல்லெண்ணெ சேர்த்து முன்சொன்ன சரக்குகளையே கல்கமாகவும் சேர்த்துப்பதமாக வடித்து நஸ்யமும், சிரோபஸ்தியும் செய்ய கண்நோய்கள் தீரும்.

1019. குடாதி—வெல்லம், கடல்நுரை, அஞ்சனக்கல், திப்பிலி, மிளகு, குங்குமப்பூ, இவைகளைச் சமமாக எடுத்துப் பொடித்துத் தேன்விட்டரைத்து மைபோல செய்து கண்களில் போட காசம் சமிக்கும்.

1020. கிருதாதி—நகுலாந்தத்தில் திரிதோஷ திமிரத்தில் போல சிகித்சை செய்யவேண்டும். சுவர்ணமாக்ஷிகம், காவிக்கல், தாளிச பத்திரி, இவைகளைச் சமமாக எடுத்துப்பொடித்து நெய், தேன், பசும்சாணிரஸம், இவைகளால் முறையே அரைத்து கண்களில் இட இராக்கண் நிவிருத்தியாகும்.

1021. கரஞ்சிகாதி—புங்கம்விதை, செங்கழுநீர் கிழங்கு, சுவர்ணகாவிக்கல், தாமரைகேஸரம், இவைகளைச் சமமாக எடுத்துப் பொடித்துப் பசும்சாணிரஸத்தால் அரைத்து மாத்திரை செய்து கண்களிலிட இராக்கண் தீரும்.

1022. கௌந்த்யாதி—அரேணுகம், திப்பிலி, அஞ்சனக்கல், இந்துப்பு இவைகளைச்சமமாக எடுத்துப்பொடித்து ஆட்டு மூத்திரத்தால் அரைத்து மாத்திரைசெய்து கண்களில் இட இராக்கண் தீரும்.

1023. காலானுசாரியாதி—நன்னாரி திரிகடு, திரிபலை, தாளகம் மனோசிலை, கடல்நுரை, இவைகளைச்சமமாக எடுத்துப்

பொடிசெய்து ஆட்டின் பாலால் அரைத்து மாத்திரைசெய்து கண்களில் உபயோகிக்கக் கண்நோய்கள் தீரும்.

1024. அடபதியன் இலையை வேகவைத்துத்தின்ன இராக்கண் சமிக்கும்.

1025. ஸுவர்ணாதி—சுவர்ணம், காவிக்கல், சிறுதேக்கு, இவைகளைச் சம எடையாக எடுத்துப்பொடித்து அந்தச் சூர்ணத்தையாவது அல்லது அச்சூர்ணத்தை மெழுகாக அரைத்து அதையாவது கண்களில் இடம் தூரம், விதாஹங்கள் முதலியன தீரும்.

1026. ஸுநேத்ரீவர்த்தி—திரிகடு, திரிபலை, வாலுளுவை யரிசி, புங்கம்விதை, வாய்விளங்கம், இவை வகைக்கு 8 கிராம் தாமரைக் கிழங்கு, அதிமதுரம், தாமிரப்பொடி, இந்துப்பு, ஸ்படிகம் சங்கு, இவைவகைக்கு 3 கிராம் வசம்பு, அஞ்சனக்கல், காவிக்கல், சந்தனம், செஞ்சந்தனம், அரக்கு, மஞ்சள், மரமஞ்சள், வெட்டித் தோல் லோத்திப்பட்டை இவை வகைக்கு 25 கிராம் துத்தம், பீத ரோகணீ, பச்சைக்கர்ப்பூரம், இவை வகைக்கு 12 கிராம் இவைகளைக்கல்வத்திலிட்டுப் பொடித்து புங்கை ரஸத்தால் அரைத்து மாத்திரைசெய்து உலர்த்திக்கொண்டு கண்களில் இட எல்லாவிதமான கண்நோய்களும் தீரும்.

1027. மனச்சிலாதி—மனோசிலை, இந்துப்பு. அன்னபேதி, சங்கு, திரிகடு, ரஸாஞ்ஜனம், இவைகளைச் சம எடையாக எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்துத்தேன்விட்டு மெழுகாக அரைத்துக் கண்ணில் இட சுக்ரம், காசம் அர்ம, திமிரம், இவை தீரும்.

1028 திரிபலாதி—திரிபலை, திரிகடு, வாய்விளங்கம், வசம்பு தாளகம், ரஸாஞ்ஜனம், இந்துப்பு, லோத்திப்பட்டை, தாமிரப் பொடி ஸ்படிகம், மஞ்சள், மரமஞ்சள், கோரோசனம், ஏலம், சங்கு சந்தனம், மாக்ஷிகம், அகில், அரக்கு. தேத்தான்விதை, அதி மதுரம், கடல்நுரை, பச்சைக்கர்பூரம், பீதரோகணீ, கரீயம், கோஷ்டம், காவிக்கல், பேய்க்கொம்மட்டிவேர், பசுவின்பல், நீர்முள்ளிவேர், முத்து, துத்தம், அரேணுகம், ஆமையோடு, சோழி, காந்தக்கல், இவைகளைச் சமமாக எடுத்துப் பொடித்துக் கல்வத்திலிட்டு சீந்தில், தான்றி, வேம்பு, புங்கு, துளசி, மருது, ஜாதி, முருங்கை, கரிப்பான், கொம்மட்டி மாதளை, இவைகளின் ரஸத்தாலும் கள், பசும்பால், தேன் நெய், இவைகளாலும், கிரமமாக அரைத்து மெழுகைப் பத்திரப்படுத்திக் கண்களில் இட திமிரம், காசம், விரணசுக்ரம், அஜகா, முதலிய ரோகங்கள் தீரும். இது நிமியால் சொல்லப்பட்டது,

## காச சிகித்ஸை

சிலேஷ்மத்தால் ஏற்பட்ட காசத்தில் குத்தி எடுக்கும் விதியும் அவ்விதம் குத்தி எடுத்தால் பிறகு செய்யவேண்டியதும் இனி சொல்லப்படும். முதலில் வமனம் விரேசனம் செய்து சுத்தி நன்ருகச் செய்யவேண்டும். பிறகு நல்ல நாளில் நல்ல முகூர்த்தத்தில் அதிக சீதோஷ்ணுதிகள் இல்லாத காலத்தில் வியாதிஸ்தனேக் குளிக்கச் செய்து சாப்பிடச் செய்து மத்தியானத்திற்கு முன் வெளிச்சம் நன்ருக இருக்கும் இடத்தில்இரண்டு ஆஸனம் போட்டு ஒன்றில் வியாதிஸ்தனே உட்காரவைத்து மற்றொன்றில் வைத்தியன் உட்கார்ந்துகொண்டு வியாதிஸ்தனே அசையாமல் கட்டி கண்ணே வாயால் ஊதி ஸ்வேதம் செய்து கட்டை விரலால் சற்று கசக்கி கண்ணின் மலத்தை இளகச் செய்து தன் மூக்குக்குச் சரியாக உட்காரவைத்துத் தலையை அசையாமல் பிடித்துக்கொள்ளச் செய்து கருவிழியிலிருந்து அரைவிரல் தள்ளி கடைக்கண்ணிலிருந்து கால்விரல் தள்ளி ச்லாகையைச் சுண்டுவிரல் நடுவிரல் கட்டைவிரல் இவைகளால் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு முன் சொன்ன இடத்தில் கொஞ்சம் முறித்து சலாகையை தேவரந்திர வழியாகச் செலுத்தி மேல்கீழ் போகாமல் திரித்து மலத்தை இளகச்செய்து வேதிக்கவும். வலது கண்ணே இடது கையாலும் இடது கண்ணே வலது கையாலும் வேதிக்கவும். குத்து நேராக விழுந்தால் வலி இருக்காது. ஒரு துளி ஜலம் வரும். பிறகு வியாதிஸ்தனே ஆச்வாஸப்படுத்தி முலேப்பால்விட்டு சலாகை நுணியால் வலிக்காமல் திருஷ்டிமண்டலத்தை லேகனம் செய்து கபத்தை மூக்குக்குச் சமீபமாகக்கொண்டு வந்து தும்மல் வரும்படி செய்து ஆடைபோல் எடுக்கவும். அப்பொழுது அந்த மலம் நன்ருக இளகாவிடில் முலேப்பால் விட்டு தாரை செய்து வியர்வை பிடித்து மலம் வெளிவந்தவுடன் துணியை நெய்யில் நனேத்துக் கண்ணேக்கட்டி மல்லாந்து படுக்கவைக்கவும். ஒரு கண்தான் குத்தியிருந்தால் மறு பக்கமாகப் படுக்கச் செய்யவும். இரண்டு கண்ணும் வேதித்திருந்தால் மல்லாக்கப் படுக்க வைக்கவும். தலேக்கும் காலுக்கும் மஞ்சிஷ்டி தைலம் தேய்க்கவும். நல்ல பத்தியம் வேண்டும். காற்று வெய்யில் முதலியன கொஞ்சமும் கூடாது. இளேப்பு, ஜலதோஷம், தும்மல், குளிர்ந்த ஜலம் சாப்பிடுவது, கீழ்பார்த்து உட்காருவது, பல் தேய்த்தல், கெட்டியான பதார்த்தம் கடித்துச் சாப்பிடுவது, இவைகள் ஏழு நாள் கூடாது. வயிறு நிறையச் சாப்பிடக்கூடாது. மஹாஸ்நேஹ பானம்போல் பத்யம் இருக்கவேண்டும். சிகித்ஸை முடிகிற வரையிலும் குறைந்த அளவிலேயே சாப்பிடவேண்டும். கண்ணில் வலி இருந்தால் இளம் சூடான ஜலம் தாரைவிடவும். யவைசாதம்

சாப்பிடவும், நெல்லிக்காய் திரிகடு, நெய், கூழ், கஞ்சி, இவை சாப்பிடலாம். மூன்ருவது நாள் கட்டு அவிழ்த்து மருந்து ஜலத்தால் அலம்பி முன்போல் கட்டி பிறகு ஏழாவது நாள் அவிழ்த்து வாத ஹரங்களான கஷாயத்தால் அலம்பி கண் சரியாக ஆகிற வரையிலும் பத்தியமாகவே இருக்கவேண்டும். நெருப்பு, சூர்யன், வெய்யில், இவைகளைப் பார்க்கக்கூடாது. வேதத்திலும் பிறகு ரக்ஷையிலும் தவறுதல் ஏற்பட்டால் வலி அதிமந்தம் முதலியன காணும். அதற்கு உடன் தூர்வாதிகிருதம் தாரையும் சததௌத கிருதலேபனம். சந்தனுதிகிருதம் தாரை திரிபலை அரைத்துப் போடுதல், முதலியன செய்யவும். இது வேதவிதி(காசம் குத்தும் விதி) ஸர்வாக்ஷிரோகங்களில் வாதாபிஷ்யந்தம் வாதாதிமந்தம், ஹதாதிமந்தம், அன்யதோவாதம், வாதபர்யயம் பித்தாபிஷ்யந்தம், பித்தாதிமந்தம், சிலேஷ்மாபிஷ்யந்தம், சிலேஷ்மாதிமந்தம், ரக்தாபிஷ்யந்தம், ரக்தாதிமந்தம், விக்ரேணனம், சுத்தாக்ஷிபாகம், அல்பசோபம், அக்ஷிபாகாத்யயம், அம்லோஷிதம், இந்தப் பதினறுக்கும் தாரை செய்வதற்கு முன் தீக்ஷ்ண திரவியங்களால் கண்டூஷம், நஸ்யம், செய்விக்கவும். (மிளகு திப்பிலி முதலியன தீக்ஷ்ண திரவியங்கள்) உபவாஸம் நல்லது. கடுக்காய் இந்துப்பால்| புறம்பகை (அரைத்து மேல் போடுவது) செய்யவும். சர்க்கரை, மிளகு என்ற என்ற யோகமும் நல்லது. காட்டுக்கொள்ளை (அரண்யகுளுத்தம்) துணியில் கட்டிச் சாணிப்பாலில் வேகவைத்துத் தோல்களைந்து காயவைத்துப் பொடித்துக் கண்ணில் போடவும், திரிகடு, கடுக்காய் ஆதியானகிழி ஒத்தடம் கொடுக்கவும். 50 கிராம் கடம்கடேரியை 800 மிலிலிடர் ஜலத்தில் கஷாயம் வைத்து 100 மிலிலிடராகச் சுண்டின பிறகு தேன் கலந்து தாரை செய்யவும். இது தோஷங்கள் தனித் தனியாகவும் சேர்ந்தும் வரும் வியாதிகளைத் தீர்க்கும்.

கோரைக்கிழங்கு, மரமஞ்சள் இவை கஷாயம் செய்து தாரை செய்யவும். முருங்கை இலை ரஸத்தில் தேன் சேர்த்துத் தாரை செய்யவும். வாதாபிஷ்யந்தம் தீரும். இளம் ஆமணக்கு வேரை ஆட்டின் பாலில் வேகவைத்து ஷி பாலைத் தாரை செய்யவும். நெல்பொரி பொடிசெய்து துணியில் கட்டி வேது பிடிக்கவிம். இதை வாதாபிஷ்யந்தத்தைப் போக்கும் மஞ்சிஷ்டாரஜன்யாதி கஷாயமும், கசேருயஷ்டியாஹ்வாதி கஷாயமும், புண்ட்ரயஷ்டிநிசாதியும் சவேதலோத்திராதியும் ஸுமன க்ஷாராதியும் பித்தரக்தாபிஷ்யந்தத்திற்குத் தாரை செய்ய உபயோகமுள்ளவை இந்தக் கஷாயங்கள் இனிமேல் சொல்லப்படும். ஸுமன:க்ஷாராதி கபஸ்யந்தத்திற்கு மிகவும் நல்லது. பிரபௌண்டரீகயஷ்டியாஹ்வாதியான சூர்ணம் குளிகை உபயோகிக்க எல்லா அபிஷ்யந்தமும்

தீரும். சூடு உறுத்தல் வலி முதலியன தீரும். தாம்பிரத்தின் மேல் எலுமிச்சம் பழ ரஸத்தால் சோழி அரைத்துப்போட செங் கண் தீரும். தாம்பிரத்தில் சங்கைத்தேனுல் அரைத்துப்போடவும் செங்கண் தீரும். உறிக்கொடி இலையை அரைத்து நெல் கனத் திற்கு உள்ளங்கையில் தடவி ஐந்து நாழிகை நேரம் அதையே பார்த்துக்கொண்டிருக்கக் கண் நன்ருகத் தெரியும்.

1029. கடுக்காய், இந்துப்பு, மாக்ஷிகம். காவிமண், இவையை சுத்த ஜலத்தில் அரைத்துக் குளிகை செய்து கண்ணுக்கு மேல் போட எல்லா தோஷமும் தீரும்.

1030. திரிகடு. கடுக்காய், துத்தம், அதிமதுரம், லோத்திப் பட்டை, இவை அரைத்துத் துணியில் கிழிகட்டித் தாம்பிர பாத்திரத்தில் காடியில் நனைத்து வேது பிடிக்கவும்.

1031. மஞ்சிஷ்டாரஜன்யாதி—மஞ்சிஷ்டி, மஞ்சள், அரக்கு, திராக்ஷை, ருத்தி, அதிமதுரம், செங்கழுநீர்கிழங்கு, இவை கஷாயம் வைத்து ஜீனி சர்க்கரை சேர்த்துத் தாரை செய்யவும். ரக்தபித்த வியாதிகள் தீரும்.

---


# நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்
N. வைத்யநாதன், R. M P.

# PURI BROTHERS (REGD.)

**Musk, Saffron and Indian Drugs Merchants**

## JULLUNDUR-1

Tele : "VENKATESH" Phone : 3923

**PRICE LIST FOR 1970**

| | | Rs. P. |
|---|---|---|
| Pure Musk | per gram | 35-00 |
| Pure Saffron | ,, | 1-75 |
| Pure Gorochanam | ,, | 9-00 |
| Pu.e Pearls special | ,, | 10-00 |
| Pure Pearls No, 2. | ,, | 8-00 |
| Pure Pearls No. 3. | ,, | 6-00 |
| Pure Amber No. 1 | per gm | 4-00 |
| Pure Amber No. 2 | ,, | 3-50 |
| Pure Amber No. 3 | ,, | 3-00 |
| Pure Amber Black | ,, | 1-00 |

### PACHAKARPURAM

| | | |
|---|---|---|
| Spl. Bhimseni | per gram | 0-25 |
| Singapuri (Yellow) | ,, | 0-20 |
| German or Japan | | 0-20 |
| Ashtavargam | per Kilo | 14-00 |
| Jiwak Rishwak | ,, | 2-50 |
| Meda Mahameda | ,, | 8-00 |
| Kakoli Kashir Kakoli | ,, | 14-00 |
| Ridhi Vridhi | ,, | 12-00 |
| Suryatapi Silajit No. 1 | per Kilo | 100-00 |
| No. 2. | ,, | 85-00 |

### BHASAMS

| | | |
|---|---|---|
| Rajit Bhasam | per K. G. | 1000-00 |
| Tamber Bhasam | ,, | 220-00 |
| Abhrak (100 times) | ,, | 230-00 |
| Abhrak (60 times) | ,, | 160-00 |
| Bang Bhasam | ,, | 160-00 |
| Akik Bhasam | ,, | 50-00 |
| Shilajit | ,, | 30-00 |
| Annabedi Bhasam | ,, | 30-00 |
| Swaran Makshika | ,, | 60-00 |
| Nag Bhasam | ,, | 120-00 |
| Pearl Bhasam | per ten gram | 100-00 |
| Parda Bhasam | ,, | 10-75 |

| | | Rs. P. |
|---|---|---|
| Hingul Bhasam | per ten gm. | 10-75 |
| Loh Bhasam (special) | per K. G. | 130-00 |
| Loh Bhasam No. 1 | ,, | 75-00 |
| Mandur Bhasam | ,, | 30-00 |
| Sankh Bhasam | ,, | 30-00 |
| Shring Bhasam | ,, | 30-00 |
| Vaikrant Bhasam | ,, | 180-00 |
| Hartal Godanti | ,, | 30-00 |
| Kant Loh Bhasam | ,, | 250-00 |
| Parwal Bhasam | ,, | 175-00 |

### PILLS (GUTTIKA)

| | | |
|---|---|---|
| Agnitundi Vati | per ten gm. | 1-00 |
| Basant Kushmakar | ,, | 50-00 |
| Chander Odya Ras | ,, | 40-00 |
| Sanjeevani Vati | ,, | 6-00 |
| Eladi Vati | per K. G. | 35-00 |
| Echha Bhedi Ras | ,, | 60-00 |
| Kaf Ketu Ras | ,, | 50-00 |
| Kan Kayan Vati | ,, | 45-00 |
| Khadi Radi Vati | ,, | 45-00 |
| Lavangadi Vati | ,, | 120-00 |
| Mritunjaya Ras | ,, | 125-00 |
| Mandur Vati | ,, | 40-00 |
| Sankh Vati | ,, | 50-00 |
| Shul Gaj Kesar Vati | ,, | 80-00 |
| Nityodit Ras | ,, | 125-00 |
| Chander Prabha Vati | | 60-00 |
| Maha Jograj Guggal | ,, | 110-00 |
| Jograj Guggal | ,, | 35-00 |
| Kishore Guggal | ,, | 33-00 |
| Kanchanar Guggal | ,, | 35-00 |
| Raj Parsadani Vati | 30 pills | 1-00 |
| Mridu Virechan | 1000 ,, | 16-00 |
| Leucorhin | 1000 ,, | 50-00 |
| Kasari Pills | 1000 ,, | 30-00 |

5% Commission will be allowed on all orders received direct by us

# இம்ப்காப்ஸ்

## பூரண இயந்திர சாதன

### வசதியோடு சுத்தமான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளை தயாரிக்கிறது

**இந்திய மருத்துவ முறையின்படி வைத்தியம் செய்யும் மருத்துவர்கள் 1944-ம் ஆண்டிலேயே முதன்முதலாகக் கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையில் ஒரு மருந்து சாலையை நிறுவினர். சுத்தமான மருந்துகளை தயாரித்து ஆயுர்வேத, சித்த, யுனானி மருத்துவ முறைக்குச் சேவை செய்வதுடன், நம் நாட்டு மருந்து மூலிகைகளை ஆராய்ந்து, புராதன மருத்துவ வல்லுநர்கள் பின்பற்றிய முறையை ஒரு நிலைப்படுத்துவதே இதன் நோக்கம். இதில் நாங்கள் நம்பிக்கையோடு முன்னேறினோம். இப்போது நவீன இயந்திர சாதன வசதிகளுடன் மருந்துகளை பக்குவமாகத் தயாரிப்பதில் பூரணத்துவம் பெற்று மக்களுக்குத் திறமையாக சேவை புரிகிறோம்.**

**இம்ப்காப்ஸ் தேசமக்களை ஆரோக்கியமாகவும் வலிவுள்ளவர்களாகவும் இருக்க துணை செய்கிறது.**


IMPCOPS

**தி இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.**
லாட்டிஸ் பிரிட்ஜ் ரோடு, அடையாறு, சென்னை-20

**பிரபலமான கெமிஸ்டுகள் மற்றும் டிரக்கிஸ்டுகளிடம் கிடைக்கும்**

மற்ற அலுவலகங்கள்:

4/186, மௌண்ட்ரோடு, மதராஸ்-2 போன்: 86520
48, தெற்குமாசி வீதி, மதுரை P.O.
27, காசிவிஸ்வேஸ்வரன் கோயில் தெரு, சுல்தான்பேட்டை, பெங்களூர்-2 (மைசூர் ஸ்டேட்)



maa/IMP-/747/M-TA

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

# "சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலேக்கட்டிகளை

எங்கிலேயிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர். (S. Ry.)


Edited by Vaidya Vachaspati Pandit P. S. Rama Sarma, Published by Dr. T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam, at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2. Printed at Githa Press, Tiruchirapalli-2.